# இலங்கைக் கலைஞர்
# டேவிட் பெயின்ரர்

- தேசிய ஓவியக் கலைஞரான டேவிட் பெயின்ரர் ஆங்கிலேய இனத் தந்தைக்கும் சிங்களத் தாயாருக்கும் 1900 ஆம் ஆண்டில் இந்தியாவில் அல்மேறா என்னும் இடத்தில் பிறந்தார். இவரது தந்தையார் ஒரு கிறிஸ்தவப் போதகராவார்.
- இங்கிலாந்து சென்று றோயல் அக்கடமியில் ஓவியக் கலையைக் கற்றுள்ளார்.
- **ஐரோப்பிய மரபு சார்ந்த இயற்கை வாதப் பாணிப் பண்புகள் வெளிப்படும்** வகையில் மனித வடிவை ஓவியமாக வரையும் பொழுது உடலின் அழகு, லயம், அகஇயல்புகள் என்பன சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டு உள்ளன.
- தேசிய புகழ் பூத்த ஓவியரான இவர் **இலங்கைக் கலைச் சங்கத்தின் சமகாலக் கலைஞர்களுள் ஒருவராவர்.**
- **டேவிட் பெயின்ரது படைப்புக்களின் விடயப் பொருள்கள் வருமாறு:**
    1. பிரதிமை ஓவியம்
    2. மனித உருவ ஒழுங்கமைப்பு
    3. திரித்துவத் தேவாலய சுவரோவியங்கள்.
- **டேவிட் பெயின்ரர் ஓவியக் கலைஞரின் படைப்புகளும் ஓவிய ஒழுங்கமைப்பு இயல்புகளும்.**
    - உயிரோட்டத்தையும், மேனி அழகையும் நன்கு வெளிப்படுத்தும் வகையில் மனித உருவங்களைச் சித்தரித்தல்.
    - மனித மெய்நிலைகளில் உணர்வுகளை வெளிப்படுத்தப்பட்டிருத்தல்.
    - முப்பரிமாண இயல்புகள் வெளிப்படுமாறு பிரகாசமான வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டிருத்தல்.
    - கிறிஸ்தவக் கருப்பொருள்களைச் சித்தரிக்கும் போது ஐரோப்பியப் பண்பாட்டுடன் நிலவுருவில் இலங்கைப் பின்னணியும் சித்தரிக்கப்பட்டிருத்தல்.

e teacher Learning Management System

**டேவிட்பேன்ரரின் ஓவியம்:**

## வெற்றியுடன் ஜெரூசலத்திற்குள் பிரவேசித்தல்



eteacher Learning Management System

- இந்த ஓவியம் கொழும்பு **தேசிய கலாபவனத்தில்** நிரந்தரமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.
- **கன்வஸ்துணி மீது எண்ணெய் வர்ணத்**தினால் தீட்டப்பட்டுள்ளது.
- தளத்தில் உருவங்களைச் சித்தரிக்கும் போது முன்பகுதி, நடுப்பகுதி, பின்பகுதி மீது உருவங்களைத் ஸ்தாபித்து, ஓவியத்தின் அழகும் தூரநோக்கு இயல்புகளும் காட்டப்பட்டுள்ளன.
- முப்பரிமாண இயல்புகளுடன் அதிக இளஞ்சிவப்பு நிறம் சார்ந்த பிரகாசமான வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- ஓவியத்தின் **பின்னணிக்கு** ஜெரூசலேமிலுள்ள பாலைவனத்தைக் காட்டுவதற்குப் பதிலாக, **இலங்கை உலர்வலயத்தைச் சேர்ந்த மலைப்பாங்கான தரைப் பிரதேசம்** சித்தரிக்கப்பட்டுள்ளது.

டேவிட்பேன்ரரின் ஓவியம்:

## நல்ல சமாரியன்

- இது **கண்டி திருத்துவத் தேவாலயத்தில்** வரையப்பட்டுள்ளது.
- இயேசு நாதர் போதித்த **உவமைக் கதையொன்றின் ஒரு அங்கமே இந்த ஓவியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.** அதாவது கள்வர்களிடம் அடிவாங்கிக் காயமடைந்த ஒருவருக்கு சமாரிய இனத்தவர் ஒருவர் உதவி புரியும் சந்தர்ப்பமே இதுவாகும்.
- இயேசு பிரானின் கதையைச் சித்தரிக்கும், கண்டி திருத்துவ தேவாலய சுவரோவியங்களின் சிறப்பியல்பாக **ஐரோப்பியப் பண்பாட்டுடன் உருவமைப்பும் பின்னணி இலங்கைப் பின்னணியிலும் சித்தரிக்கப்பட்டுள்ளமையாகும்.**
- இலங்கை மனிதரின் உருவங்கள், ஆடையணிகள், சூழற் தன்மை ஆகியன இங்கு தெட்டத் தெளிவாகக் காட்சியளிக்கும் இயல்புகளாகும்.
- ஐரோப்பிய ஓவியக் கலைக் கோட்பாடுப் பண்பில் **ஆழத்தைத் காட்டுதல், தூரநோக்கு, முப்பரிமாண இயல்பு** ஆகியவற்றை இந்த ஓவியத்தில் காணலாம்.

eteacher Learning Management System

